சுற்றுலாத் துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் நேற்று நீலகிரி மாவட்டம். கோத்தகிரி கிளை நூலகத்தில் நடைபெற்ற 56வது தேசிய நூலக வார விழாவில் கலந்து கொண்டு கலை இலக்கிய போட்டிகளில் வெற்றி பெற்ற பள்ளி மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கினார். உடன் அரசு துறை அலுவலர்கள் உள்ளனர்.

திருவள்ளூர் மத்திய மாவட்டம் ஆவடி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட திருவேற்காடு நகர திமுக சார்பில் பாக முகவர்கள் BLA 2 ஆலோசனைக் கூட்டம் நகரச் செயலாளர் என்.இ.கே.மூர்த்தி ஏற்பாட்டில் நடைபெற்றது. இக் கூட்டத்தில் முன்னாள் அமைச்சரும் மாவட்ட கழக செயலாளருமான ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ கலந்துகொண்டு பாக முகவர்கள் வருகின்ற நாடாளுமன்ற தேர்தல் பணியின்போது மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்து ஆலோசனைகளை வழங்கினார். உடன் ஆவடி தொகுதி பொறுப்பாளர் ஆர்.டி.இ.ஆதிசேஷன், மாவட்ட நிர்வாகிகள் நடுகுத்தகை கே.ஜெ.ரமேஷ், எஸ்.ஜெயபாலன், த.எத்திராஜ், ஜி.விமல்வர்ஷன், மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் பெ.வினோத், நகர பார்வையாளர் வழக்கறிஞர் ராஜ்குமார், உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பாக முகவர்கள் கலந்து கொண்டனர்.

கோவையில்

ரூ.13.75 கோடி மதிப்பில் மருத்துவ உபகரணங்களுடன் புதிய கட்டடம்!

அமைச்சர் மா.சுப்பிரமணியன் திறந்து வைத்தார்!

கோவை, நவ.23-

கோயம்புத்தூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் கதிரியக்கவியல் துறையில் ரூ.12 கோடி மதிப்பில் PETCT SCAN இருதயவியல் துறையில் ரூ.1.5 கோடி மதிப்பில் OCT கருவி, மேட்டுப்பாளையம் அரசு மருத்துவமனையில் ரூ.12 இலட்சம் மதிப்பில் பச்சிளம் குழந்தைகள் செவித்திறன் கண்டறிவதற்கான ஒலி புகா அறை மற்றும் நவீன உபகரணங்கள், சோமனூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் ரூ.15 இலட்சம் மதிப்பில் யோகா மற்றும் இயற்கை மருத்துவப் பிரிவு என மொத்தம் ரூ.13.75 கோடி மதிப்பில் மருத்துவ உபகரணங்கள் மற்றும் புதிய மருத்துவ கட்டடத்தை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் திறந்து வைத்தார்.

கோயம்புத்தூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் கதிரியக்கவியல் துறையில் ரூ.12 கோடி மதிப்பில் PETCT SCAN இருதயவியல் துறையில் ரூ.1.5 கோடி மதிப்பில் OCT கருவி, மேட்டுப்பாளையம் அரசு மருத்துவமனையில் ரூ.12 இலட்சம் மதிப்பில் பச்சிளம் குழந்தைகள் செவித்திறன் கண்டறிவதற்கான ஒலி புகா அறை மற்றும் நவீன உபகரணங்கள், சோமனூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் ரூ.15 இலட்சம் மதிப்பில் யோகா மற்றும் இயற்கை மருத்துவப் பிரிவு என மொத்தம் ரூ.13.75 கோடி மதிப்பில் மருத்துவ உபகரணங்கள் மற்றும் புதிய மருத்துவ கட்டடத்தை நேற்று (22.11.2023) மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சித்தலைவர் கிராந்திகுமார் பாடி, மாநகராட்சி ஆணையாளர் மா.சிவகுரு பிரபாகரன், மருத்துவக்கல்வி மற்றும் ஆராய்ச்சி மைய இயக்குநர் மரு.சங்குமணி, அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு.அ.நிர்மலா, இ.எஸ்.ஐ மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு.ரவீந்திரன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் நா.கார்த்திக், வரிவிதிப்பு குழு தலைவர் திரு.முபசீரா, மாமன்ற உறுப்பினர் திரு மதி.வி.சுமா, துணை இயக்குநர் (சுகாதாரப்பணிகள்) மரு.அருணா, மருத்துவ கண்காணிப்பாளர் மரு.கண்ணதாசன், உணவு பாதுகாப்பு அலுவலர் மரு.தமிழ்செல்வன் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் இருதயவியல் துறையில் 10000 ஆஞ்சியோ சிகிச்சை செய்து சாதனை படைத்த மருத்துவர்களை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் பாராட்டி கேடயங்களை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் பேசியதாவது :

கோயம்புத்தூர் மாவட்டத்தின் மருத்துவத்துறை வரலாற்றில் இன்று பொன் எழுத்துக்களால் பொறிக்கப்படவேண்டிய நாளாகும். கோயம்புத்தூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் நாள்தோறும் பல்லாயிரக்கணக்கான மருத்துவ நோயாளிகளை கையாளும் பணியினை ஆயிரக்கணக்கான நிர்வாகப் பணியாளர்கள் மிகச்சிறப்பாக செய்து கொண்டிருக்கிறார்கள். முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, கோவை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு கடந்த இரண்டரை ஆண்டுகளில் 10க்கும்மேற்பட்ட முறை வருகை தந்துள்ளேன். ஒவ்வொரு முறையும் ஏதாவது ஒரு புதிய கட்டமைப்பை தொடங்கி வைப்பதற்காக வருகை தந்துள்ளேன்.

அதன்படி, இந்த முறை கோயம்புத்தூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் கதிரியக்கவியல் துறையில் ரூ.12 கோடி மதிப்பில் PETCT SCAN திறந்து வைக்கப்பட்ட கருவினால் புற்றுநோயினை மிகவிரைவில் கண்டறிந்து சிகிச்சை அளிக்கும் கருவியாகும். தனியார் மருத்துவமனையில் மட்டுமே இருந்த இக் கருவிகளை, முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதல்களின்படி, பல்வேறு அரசு மருத்துவமனைகளிலும் அமைக்கப்பட்டு செயல்பாட்டில் இருந்து வருகின்றது.

தமிழ்நாடு மட்டுமல்லாமல் உலகளவில் பல்வேறு நோய்களின் பாதிப்பு அதிகரித்துகொண்டிருக்கின்றன. கொரோனா காலத்திற்கு பிறகு இருதய நோய் பாதிப்பு அதிகரித்து வருகின்றது. முதலமைச்சர் அவர்களின் இருதய நோய் பாதிப்பு ஏற்படுபவர்களுக்கு தொடக்க நிலையிலே உதவும் வகையில், ஒரு புதிய திட்டத்தை அறிவித்துள்ளார்கள். மாரடைப்பினால் ஏற்படும் உயிரிழப்பினை தடுக்கும் பொருட்டு இருதய பாதுகாப்பு கூட்டு மருந்துகளை வழங்கும் இருதயம்காப்போம் என்கிற திட்டம் கோயம்புத்தூர் மாவட்டம் மதுக்கரை ஒன்றியம் மலுமிச்சம்பட்டியில், தொடங்கி வைக்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் 8713 துணை சுகாதார நிலையங்கள், 286 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள், நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள் மூலம் குக்கிராமம், மலைகிராமங்கள் உள்ளிட்ட இடங்களில் வசிக்கும் பல்வேறு மக்களுக்கும் இந்ததிட்டம் மிகவும் பயனுள்ளதாக இருக்கின்றது. இதன்மூலம் கடந்த 4 மாதங்களில் 6000 மேற்பட்ட நபர்கள் காப்பாற்றப்பட்டுள்ளனர்.

இருதயவியல் துறையில் ரூ.1.5 கோடி மதிப்பில் OCT கருவி, மேட்டுப்பாளையம் அரசு மருத்துவமனையில் ரூ.12 இலட்சம் மதிப்பில் பச்சிளம் குழந்தைகள் செவித்திறன் கண்டறிவதற்கான ஒலிபுகா அறை மற்றும் நவீன உபகரணங்கள், சோமனூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் ரூ.15 இலட்சம் மதிப்பில் யோகா மற்றும் இயற்கை மருத்துவப் பிரிவு என மொத்தம் ரூ.13.75 கோடி மதிப்பில் மருத்துவ உபகரணங்கள் மற்றும் புதிய மருத்துவ கட்டடமும் இன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுதுறையின் சார்பில் மக்களை தேடி மருத்துவம், இன்னுயிர் காப்போம், நம்மை காப்போம் 48, கலைஞரின் வருமுன் காப்போம், சிறுநீர் பாதுகாப்போம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளது.

இந்த மருத்துவமனையில் உள்ள கேத் லேப்((CATH LAB) கருவியின் மூலம் 10 ஆயிரம் ஆஞ்சியோ செய்யப்பட்டுள்ளது. 10ஆயிரம் உயிர்களை காப்பாற்றிதற்காக மருத்துவர்களுக்கு என்னுடைய பாராட்டுகளை தெரிவித்துக் கொள்கிறேன். ரூ.1.5 கோடி செலவில் OCT கருவி பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளது. ஆஞ்சியோ, ஓபன் ஹார்ட் அறுவை சிகிச்சை செய்தவர்களுக்கு அவர்களின் இருதய செயல்பாடு மற்றும் பாதுகாப்பு பற்றி ஆராய்வதற்கான ஒரு சிறந்த கருவியாகும். தமிழ்நாட்டில் இந்த கருவி 67 இடங்களில் மட்டுமே உள்ளன. தமிழ்நாட்டில் முதலமைச்சரின் மருத்துவ காப்பீட்டு திட்டத்தின் செயல்பாடு சிறப்பாக உள்ளது என ஒன்றிய அரசு பாராட்டியுள்ளது. 1800 மேற்பட்ட மருத்துவமனைகளில் இந்த காப்பீட்டு திட்டத்தின் கீழ் பயன்பெறலாம். 1 கோடி 43 இலட்சம் குடும்பங்கள் இத்திட்ட அட்டைகளை தமிழ்நாட்டில் பெற்றுள்ளனர்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு தமிழ்நாட்டில் 100 இடங்களில் முதலமைச்சர் காப்பீட்டு திட்டத்திற்கான முகாம்கள் நடைபெறவுள்ளன. முதலமைச்சர் காப்பீட்டு திட்ட அட்டைகள் இல்லாத பொதுமக்களுக்கு உடனடியாக மாவட்ட நிர்வாகத்திடம் தொடர்பு கொண்டு விரைவில் அவர்களுக்கு முதலமைச்சர் காப்பீட்டு திட்ட அட்டைகளை வழங்க மருத்துவமனை முதல்வர் நடவடிக்கை எடுக்கவேண்டும். PETCT SCAN கருவினால் புற்று நோய் ஆரம்பத்திலே கண்டறியப்பட்டால் நோயாளிகளை விரைவில் காப்பாற்ற முடியும். புற்று நோய்க்கான அதிநவீன கருவி ரூ.34 கோடி செலவில் ஓமந்தூரார் பல்நோக்கு மருத்துவமனையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் இந்த கருவி இல்லை. இந்தியாவில் புற்று நோய்க்கான ஆராய்ச்சி மையம் மும்பையில் உள்ளது. அதற்கடுத்தப்படியாக பேரறிஞர் அண்ணா கேன்சர் இன்ஸ்டியூட் ரூ.210 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வருகின்றது.

கோயம்புத்தூர் மாவட்டத்தில் ரூ.3.15 கோடி மதிப்பீட்டில் 10 ஆரம்ப சுகாதார நிலையங்கள், ரூ.20.76 கோடி மதிப்பீட்டில் பொள்ளாச்சி அரசு மருத்துவமனையில் ஒருங்கிணைந்த புறநோயாளிகள் பிரிவு கட்டடம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனையில் ரூ.147.68 கோடி மதிப்பீட்டில் சூப்பர் ஸ்பெஷலிஸ்ட் பிரிவு கட்டப்பட்டு வருகின்றது. இதில் 10 அறுவை அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளன. விரைவில் இது தொடங்கி வைக்கப்படவுள்ளது.

முதலமைச்சர் அவர்கள் 708 நகர்ப்புற நலவாழ்வு மையங்கள் கட்டப்படும் என அறிவித்து கடந்த 06.06.2023 அன்று ஒரே நாளில் தமிழ்நாட்டில் 500 நகர்ப்புற நலவாழ்வு மையங்கள் திறந்து வைத்தார்கள். கோயம்புத்தூர் மாவட்டம் 72 நகர்ப்புற நலவாழ்வு மையங்கள் (கோயம்புத்தூர் மாநகராட்சி64, பொள்ளாச்சி நகராட்சி2, மேட்டுப்பாளையம் நகராட்சி1,வால்பாறை நகராட்சி3, கூடலூர் கவுண்டம்பாளையம் நகராட்சி-1, கருமத்தம்பட்டி நகராட்சி1) அறிவிக்கப்பட்டதில் 49 நகர்ப்புற நலவாழ்வு மையங்களை திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.

பெருநகர சென்னை மாநகராட்சி, திரு.வி.க.நகர் மண்டலத்திற்குட்பட்ட சிவராவ் தெருவில் டிராக்டரில் பொருத்தப்பட்ட மோட்டார் பம்புகள் மூலம் தேங்கியுள்ள மழைநீரினை வெளியேற்றும் நடவடிக்கைகளை மேயர் ஆர்.பிரியா அவர்கள் நேற்று (22.11.2023) பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின்போது, மத்திய வட்டார துணை ஆணையாளர் கே.ஜெ.பிரவீன் குமார், மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. - அமைச்சர் பி.கே.சேகர்பாபு முனனிலையில்

அம்பத்தூர் வடக்குப் பகுதியில் கலைஞர் நூற்றாண்டு விழா!

கனிமொழி என்.வி.என்.சோமு எம்.பி. தொடங்கி வைக்கிறார்! ஜோசப் சாமுவேல் தலைமை!

சென்னை,நவ.23-

சென்னை கிழக்கு மாவட்டம் அம்பத்தூர் வடக்கு பகுதி தி.மு.க சார்பில் கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு தொகுதியில் பணியாற்றும் மாநகராட்சி தூய்மை பணியாளர்களுக்கான தொடர் மூன்று நாள் (நவ. 24 -25- 26) முழு உடல் பரிசோதனை மருத்துவ முகாம் நாளை 24.11.2023 வெள்ளிக்கிழமை காலை 9.00 மணி ராஜேஸ்வரி நவராஜ் மஹால், ஓரகடம், அம்பத்தூர். (அம்பேத்கர் சிலை அருகில்) நடைபெறுகிறது.

ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ. தலைமை தாங்குகிறார்.

கழக நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் .டி.ஆர்.பாலு எம்.பி. மாவட்டச் செயலாளரும் அமைச்சருமான பி.கே.சேகர்பாபு, பி.கே.மூர்த்தி, பகுதிச் செயலாளர்கள் டி.எஸ்.பி.இராஜகோபால், எம்.டி..ஆர்.நாகராஜ், மாவட்ட மருத்துவர் அணி அமைப்பாளர் டாக்டர்ஜி.சாந்தகுமாரி, விரமேஷ் (எ) நீல கண்டன், எல்.பி.எப். மோகன், ஏ.பி.பூர்ணிமா, ஜி.வி.நாகவள்ளி, து.ஆயிரம், கு.கிருஷ்ணமூர்த்தி, ஜெ.பாலமுருகன், மா. பச்சையப்பன், க.முரளிபாபு, அ.செல்வம், க.கதிஜா, மா.ரமேஷ், வீரராகவன், ராதாகிருஷ்ணன், மு.இரகு,த.கண்ணபிரான், எம்.கமல் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

பி.வி.மூர்த்தி, பொன். நவராஜ்ரவி, க.ஜீவா, எஸ்.பி.அரிகிருஷ்ணன் , மா.குப்புசாமி, எம்.ஹரிகிருஷ்ணன், எம்.குணசேகரன், ப.மதி, ஆ.இரா. அருண், கோ.சேகர்லால் ஆகியோர் வரவேற்கின்றனர்.

அம்பத்தூர் தொகுதியில் பணியாற்றும் மாநகராட்சி தூய்மை பணியாளர்களுக்கான தொடர் மூன்று நாள் முழு உடல்பரிசோதனை மருத்துவ முகாமை கழக மருத்துவ அணித் தலைவர் கழக செய்தி தொடர்பாளர் திருமதி. கனிமொழி என்.வி.என்.சோமு துவக்கி வைக்கிறார்.

இதில் மேயர் பிரியாராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள் அ.வெற்றிஅழகன், ப.தாயகம்கவி, இ.பரந்தாமன், கழக தொழிலாளர் அணிச் செயலாளர் பி.டி.சி.செல்வராஜ் உள்ளிட்ட மாவட்டத்திற்குட்பட்ட கழக மாநில நிர்வாகிகள், பகுதிச் செயலாளர்கள், மாவட்ட அணிகளின் நிர்வாகிகள், வட்டச் செயலாளர்கள், மாவட்டப் பிரதிநிதிகள், வட்ட நிர்வாகிகள், கழகச் செயல்வீரர்கள் கலந்து கொள்கின்றனர்.

வீ.ரவீந்திரன் நன்றி கூறுகிறார்.

கழக இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மாநில உரிமை மீட்பு இரண்டாவது மாநில மாநாட்டிற்கான' இருசக்கர வாகன பிரச்சாரப் பேரணியை கடந்த 15 ஆம் தேதி கன்னியாகுமரி – திருவள்ளுவர் சிலை முன்பாக தொடங்கி வைத்தார் இந்த இருசக்கர வாகனப் பேரணி திருவள்ளூர் மேற்கு மாவட்டத்தில் உள்ள திருத்தணி மற்றும் திருவள்ளூர் தொகுதிக்கு வருகை புரிந்ததையொட்டி மாவட்டக் கழகச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ திருவள்ளூர் சட்ட மன்ற உறுப்பினர் வி.ஜி.ராஜேந்திரன் ஆகியோர் இரு சக்கர வாகனங்களில் வந்த இளைஞர்களை வரவேற்று திருவள்ளூர் திருத்தணி தொகுதிக்கான பேரணியை தொடங்கி வைத்து நீட் தேர்வு எதிர்த்து பிரச்சாரம் மேற்கொண்டார்கள். உடன் தலைமை செயற்குழு உறுப்பினர் திருத்தணி எம்.பூபதி, மாநில மாவட்ட நிர்வாகிகள் கே.திராவிடபக்தன், ஆர்.டி.இ.ஆதிசேசன், உதயமலர் பாண்டியன், சி.ஜெயபாரதி, எம்.மிதுன் சக்ரவர்த்தி, ப.சிட்டிபாபு, வி.வினோத்குமார், ஆர்த்தி ரவி, சி.என்.சண்முகம், பெ.பழனி, கூளூர் எம்.ராஜேந்திரன், என்.கிருஷ்ணன், சி.ஜெ.சீனிவாசன், பி.டி.சந்திரன், சி.சு.ரவிச்சந்திரன், எஸ்.மகாலிங்கம், கே.ஹரிகிருஷ்ணன், டி.கிறிஸ்டி, மோ.ரமேஷ், எம்.ஜி.ஜோதிக்குமார், மாவட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் ம.கிரண், டி.மோதிலால், டி.எம்.சுகுமாரன், டி.கே.பாபு, ம.புவனேஷ்குமார், டி.ஆர்.திலீபன் உள்பட பலர் உள்ளனர்.

தி.மு.க. நெசவாளர் அணி

மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்

ஆறாவது பட்டியல்

தி.மு.க. நெசவாளர் அணித் தலைவர் நன்னியூர் இராஜேந்திரன் அறிவிப்பு

கழகத் தலைவர் அவர்களின் ஆணைப்படி மாவட்டச் செயலாளர் ஒப்புதலோடு தி.மு.க. நெசவாளர் அணியின் மாவட்ட அமைப்பாளர் – துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

கும்பகோணம் மாநகரம்

தலைவர் : பி.எஸ்.கோதண்டராமன், எண்.160, ஏ.ஆர்.ஆர். ரோடு, கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம்

துணைத்தலைவர்: கே.வி.சங்கர், ராஜராம் காலனி, அரசலாறு வழி நடப்பு, எலுமிச்சங்காபாளையம், கும்பகோணம் தஞ்சாவூர் மாவட்டம்

அமைப்பாளர் : எம்.ஆர்.சந்திரசேகரன், எண் 7,8, மஞ்சக்கார தெரு, கும்பகோணம் தஞ்சாவூர் மாவட்டம்

துணை அமைப்பாளர்கள்: பி.எல்.ராஜா, எண்.13, ஜே.பி.கீழ் வீதி, கும்பகோணம் தஞ்சாவூர் மாவட்டம்

எம்.குமார், எண் 8டி, செட்டி புதுத்தெரு, ஏ.ஆர்.ஆர்.ரோடு, கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம்

பி.எஸ்.சதீஸ்குமார், 2/204 ஏ.ஆர்.ஆர்.ரோடு, கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம்

எல்.ஆர்.மோகன், எண்.58சி, துவரங்குறிச்சி கீழத்தெரு கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம்

என்.பி.ஜீவன், எண்.6/99, சௌராஷ்டிரா புதுத்தெரு, கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம்

சிவகாசி மாநகரம்

தலைவர்: தர்மர், எண்.925, அண்ணா காலனி, திருத்தங்கல், விருதுநகர் மாவட்டம்

துணைத்தலைவர்: குருசாமி, எண் 21 ஏ, சங்கரப்பா நாயுடு தெரு, திருத்தங்கல், விருதுநகர் மாவட்டம்

அமைப்பாளர் கார்த்திக், எண் 201/2, விநாயகர் காலனி, சிவகாசி, விருதுநகர் மாவட்டம்

துணை அமைப்பாளர்கள்: கருத்தப்பாண்டி, 201/2, விநாயகர்காலனி, திருத்தங்கல், விருதுநகர் மாவட்டம்

சுடலைமணி, எண் 86, பட்டாவூரணி பெரியண்ணன் ரோடு, சிவகாசி, விருதுநகர் மாவட்டம்

விக்ரமாதித்தன், 144ஏ, அய்யப்ப நாடார் சந்து திருத்தங்கல், விருதுநகர் மாவட்டம்

நாகராஜ், எண்.988, முருகன் காலனி பள்ளப்பட்டு ரோடு, விருதுநகர் மாவட்டம்

பொன்ராஜ், எண்.89/78ஏ, வடக்குத் தெரு, திருத்தங்கல், விருதுநகர் மாவட்டம்

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம்

தி.மு.க. நெசவாளர் அணியின் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட துணை அமைப்பாளராக ஏற்கனவேநியமிக்கப்பட்ட பி.சி. சபரி அவர்கள்அப்பொறுப்பிலிருந்துவிடுவிக்கப்படுகிறார்.

மேலு ம்கீழ்கண்டவர்கள்கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட நெசவாளர் அணியின் துணை அமைப்பாளராக நியமிக்கப்படுகிறார்கள்.

துணை அமைப்பாளர்கள் எம். நாமதேவன் பாரண்டப்பள்ளி, மத்தூர், கிருஷ்ணகிரி.

என். நாகராஜ், காட்டேரி, ஊத்தங்கரை, கிருஷ்ணகிரி. கே.கே. சிவக்குமார், கொம்பட்டு, கோவிந்தபுரம், ஊத்தங்கரை, கிருஷ்ணகிரி.

கே. அனுமந்தராஜ் இட்டிக்கல்அகரம், கிருஷ்ணகிரி. எ.கே. சரவணன்வேல், வேட்டியம்பட்டி, கிருஷ்ணகிரி.

ஏற்கனவே நியமிக்கப்பட்ட கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட நெசவாளர் அணி நிர்வாகிகள் இவர்களுடன் இணைந்து பணியாற்றிடவேண்டுமெனகேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்

"அண்ணா அறிவாலயம்"
சென்னை 18.
நாள் : 21.11.2023

நன்னியூர் இராஜேந்திரன்
தலைவர்
தி.மு.க. நெசவாளர் அணி